# மேலாய்வுக் களமளிக்கும் முனைவர் பட்ட ஆய்வுகள் (Doctoral studies in the field of supervision)

*மு.சுதா & இரா.இரவிக்குமார் | M. Sudha & R. Ravikumar*[14]

**Abstract:** The doctoral thesis which were supervising by the Dr.M. Sudha, who is the professor in the Dept. of Tamil, Alagappa University, Karaikudi, in the span of years between 2006 – 2018. The objective of the paper is list out of the thesis and evaluate its research quality.

தொகுத்தல் என்பது பண்டைக்காலம் தொட்டே இருந்து வரும் ஒரு நடைமுறை. சங்க இலக்கியங்கள் முதல் இக்கால இலக்கியம் வரையிலான இலக்கியத் தொகுப்புகளே இதற்குச் சான்று. கால வரையறைக்கு உட்படுத்துதல் மட்டுமன்றி ஒரு கால கட்டச் சமூகச் சூழலை அறிவதற்கும் இத்தொகுப்பு முயற்சிகள் உதவுபுரியும். ஒரு பொருண்மை தொடர் புடைய நூல்கள் அல்லது ஒரே படைப் பாளரின் பல்துறைப் படைப்புகள் குறித்து அறிவதற்கும். அவை குறித்த அடுத்தகட்ட ஆய்வுகளுக்கு முன்னோடியாகப் பயன் படுத்திக் கொள்வதற்கும் தொகுப்புகள் பயன்படுகின்றன. இத்தொகுப்புக் கலையின் சிறப்பைப் பற்றி து. குமரேசன் தன் வலைப்பூ பக்கத்தில் கூறும்போது,

‘தொகுப்புக்கலை என்பது தொல்தமிழர் காலம் முதலே தமிழில் அறியப் பட்ட ஒன்றாகும். இத்தொகை வழக்கங்களின் உதவிகொண்டே சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே.சாமிநாதய்யர் போன்றோர் ஓலைச்சுவடிகளிலிருந்து சங்க இலக்கியங்களை எடுத்துப் பதிப்பித்துள்ளனர். தமிழில் அச்சுநூல்கள் உருவாகும் முன்னர் வழக்கில் இருந்த ஓலைச் சுவடிகளைத் தொகுத்து அட்டவணைப்படுத்திய வரலாறும் உண்டு என்று கூறுவதோடு, மெக்கன்சியின் ஓலைச் சுவடி சேகரிப்பு, அதனால் அறியலாகும் தமிழகம் மற்றும் தமிழ்மொழியின் வரலாறு குறித்தும் எடுத்துரைக்கின்றார்’ (து.குமரேசன், நூற் தொகைப் பதிப்புகள், வலைப்பூ பக்கம், *21.04.2011)*

இந்நூல் தொகைகள் ஒரு மொழியில் காலந்தோறும் வெளிவரும் இலக்கியம், கலை, அறிவியல், ஆன்மீகம், பண்பாடு மற்றும் பிற நூல்கள் குறித்தும் தெரிவிக்கும் கருவிகளாகும். நாட்டின் வரலாறு, மக்களின் பண்பாடு, நாகரிக வளர்ச்சி, கல்வி மேம்பாடு முதலியவற்றை அடுத்து வரும் தலைமுறையினருக்குத் தெரியப் படுத்தவும், மொழியின் வளர்ச்சிக்குத் துணை நிற்கவும் இது பயன்படும் என்ற கருத்து நூற்தொகைகளின் சிறப்பை உணர்த்தும். அவ்வகையில் இன்று கல்வி நிறுவனங்கள் இலக்கியங்கள் சார்ந்து பல் வேறு ஆய்வாளர்களை உருவாக்கி வரும் நிலையில் அவ்வாய்வுகள் குறித்த அடங்கல், ஆய்வின் புதிய போக்குகளையும் மாறுபட்ட சிந்தனைகளையும் எடுத்துரைப்ப தோடு பின்வரும் புதிய ஆய்வுகளுக்கு முன்னோடியாக நின்று உதவும் என்ற நிலையில் அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் நிகழ்ந்த முனைவர்பட்ட ஆய்வுகள் குறிப்பாக ஆய்வுக் கட்டுரையின் விரிவு கருதி ஒருவரின் வழிகாட்டுதலில் உருவான ஆய்வேடுகள் குறித்த அடங்கலைத் தருவதாய் இக்கட்டுரை அமைகின்றது.

**குறிச்சொற்கள்** : மேலாய்வு, களமளிக்கும், முனைவர் பட்ட, ஆய்வுகள், *Doctoral studies, supervision*

***Citation:*** *சுதா மு. & இரவிக்குமார் இரா., (February 2021), “மேலாய்வுக் களமளிக்கும் முனைவர் பட்ட ஆய்வுகள் (Doctoral studies in the field of supervision)”, IJETS (Inam: International E-Journal of Tamil Studies) (ISSN:2455-0531), Vol.6, Issue 25, pp.37-15*

***

*2006 முதல் 2018 வரை முனைவர் மு.சுதா அவர்களின் வழிகாட்டுதலில் செய்யப்பட்ட ஆய்வுகளில் முனைவர் பட்டம் பெற்றவர்கள் பத்து ஆய்வாளர்கள். அவ்வாய்வு விவரமாவது,*

| | |
|---|---|
| சங்க இலக்கியத்தில் | - 7 |
| காப்பிய இலக்கியத்தில் | - 1 |
| இக்கால இலக்கியத்தில் | - 1 |

[14] இணைப் பேராசிரியர் & தமிழ் – ஆய்வாளர், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

பொது நிலையில் - 1

என்பனவாகும்.

**ஐங்குறுநூற்றில் உயிரியல் செய்திகள்**

இரா. மாரிமுத்துவால் 'ஐங்குறு நூற்றில் உயிரியல் செய்திகள்' என்ற தலைப்பில் செய்யப்பட்ட முனைவர்பட்ட ஆய்வானது இலக்கியத்தை அறிவியல் நோக்கில் காணும் ஆய்வாக உருவாகி யுள்ளது. அகப்பாடல்களில் தலைவன் தலைவியின் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்த ஓரறிவு முதல் ஐந்தறிவு வரையிலான உயினங்களைப் பயன் படுத்துகையில் அவற்றின் தோற்றம், அமைப்பு, பண்பு போன்றனவற்றையும் பதிவு செய்துள்ளனர் என்பதனைக் கருதுகோளாகக் கொண்ட ஆய்வாளர் அவ்வுயிரியல் செய்திகளையும் அம்மக்களின் இயற்கையுடன் இயைந்த வாழ்வினையும், இன்றைய உயிரியல் ஆய்வுக்கு அடிப் படையாக அன்றைய இலக்கியங்கள் அமைந்திருப்பதையும் எடுத்துரைப்பதை நோக்கமாகக் கொண்டு ஆய்வேட்டை அமைத்துள்ளார்.

'சங்க இலக்கியங்களில் தாவரங்கள், விலங்கினங்கள் தொடர்பாக செய்யப் பட்டுள்ள பி.எல்.சாமி, கு.சீனிவாசன், ச.வே.சுப்பிரமணியம் போன்றோர்களின் ஆய்வுகளை ஆய்வின் முன்னாய்வாகக் கொண்டுள்ளார். ஐங்குறுநூற்றில் உயிரியல், உயிரியல் பற்றிய விளக்கம், தொல்காப்பியரின் உயிரினப் பாகுபாடு குறித்து விரித்துரைத்துள்ளார். ஐங்குறுநூற்று குறிஞ்சி முதலான ஐந்திணைகளில் காணப்படும் உயிரினங்கள் பற்றிய பதிவு மட்டு மல்லாமல் அவ்வுயிரினங்கள் குறித்த இன்றைய அறிவியல் ஆய்வுகள், அறிவியல் பெயர்கள் குறித்தும் பதிவு செய்துள்ளார். தமிழரும் தாவரமும், சங்கப்புலவரின் பல் துறை அறிவு, பண்டைய இந்தியத் தாவர வியல் போன்ற நூல்களையும் ஆய்வேடு கலைக்களஞ்சியங்களையும் துணைக் கொண்டு, ஆய்வாளர் அவற்றைத் துணை நூற்பட்டியலாகவும் இணைத்துள்ளார்.

'விலங்குள்,பறவைகள் ஆகியவற்றை ஆராய்ந்து வகைபிரித்து, அவை எந்த நிலத்தில் வளரும் உடல் அமைப்பைக் கொண்டவை என்பதை உணர்ந்து அந்த நிலத்தில் பதிவுசெய்து, அவ்வுயிரினங்களின் நிறம், உணவு, வாழும் இடம், இனப் பெருக்க முறை, உடலியல், வாழ்வியல் கூறுகள் போன்ற இன்றைய விலங்கு நூலார் கண்டு ஆராய்ந்து தெரிந்துகொண்ட உண்மைகளை ஐங்குறுநூறு பாடிய புலவர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பதிவுசெய்து தங்கள் அறிவியல் அறிதிறனை நிறுவிச் சென்றுள்ளனர்' என்ற ஆய்வு முடிவைத் தக்கச் சான்றுகளுடன் நிறுவித் தந்துள்ள ஆய்வாளர், சங்க இலக்கியம் முழுமையும் இவ்வாறு காணப் படவேண்டிய ஒன்று என்ற மேலாய்வுக் களத்தையும் தந்துள்ளார்.

**சங்க இலக்கியத்தில் வரலாற்றுப் பதிவுகள்**

'சங்க இலக்கியத்தில் வரலாற்றுப் பதிவுகள்' என்னும் தலைப்பில் ஆய்வாளர் ந.இராஜேந்திரன் அவர்களால் உருவாக்கப்பட்ட ஆய்வேடாகும். சங்க இலக்கியத்தில் காணலாகும் வரலாற்றுப் பதிவுகளின் வழியாகத் தமிழ் மரபை வாழவைத்துக் கொண்டிருக்கும் பழந்தமிழ்இலக்கியங்களின் தனிச் சிறப்பை எடுத்துரைப்பதும், வரலாற்று அடிப்படையில் பழந்தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை இலக்கியச் சான்றுகளாகப் பதிவு செய்வதையும் நோக்கமாகக் கொண்ட இவ்வாய்வேடு சங்க இலக்கியங்களில் அப்போதைய அரசாட்சி பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் புலவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளன என்ற கருதுகோளை முன்வைத்து அதனை நிறுவியும் உள்ளது.

எட்டுத் தொகை நூல்களை மட்டும் விரிவு கருதி முதன்மை ஆதாரமாகக் கொண்ட இவ்வாய்வேடு இரா. இராகவையங்கார், க.ப.அறவாணன், கா. கோவிந்தன் ஆகியோரின் திறனாய்வு நூல்கள் உட்பட 90-க்கும் மேற்பட்ட நூல்களைத் துணையாகக் கொண்டும், தமிழ் அடங்கிய அகராதிகள், கலைக் களஞ்சியங்கள் போன்றவற்றின் துணை யோடும் உருவாக்கப்பட்டதற்கும் விரிந்த துணைநூற்பட்டியல் சான்றாகிறது. இவ் வாய்வுக்கான முன்னோடி ஆய்வுகளைப் பட்டியலிட்ட இவ்வாய்வாளர் வரலாறு என்பதன் விளக்கமும், பதிவுப் பின் புலமும், அக இலக்கியத்தில் வரலாற்றுப் பதிவுகள், புற இலக்கியத்தில் வரலாற்றுப் பதிவுகள், அகப்புற இலக்கியத்தில் வரலாற்றுப் பதிவுகள், வரலாற்றுப் பதிவுகள் ஒரு மதிப்பீடு என்ற ஐந்து இயல் பகுப்புகளில் ஒரே நீர்மையோடு தரவுகளைத் தொகுத்துத் தந்துள்ளார். குறிப்பாக, இவ்வாய்வேட்டின் எட்டுத் தொகை இலக்கியங்களில் காணலாகும் வரலாற்றுப் பதிவுகள் என்ற

பின்னிணைப்பு, அட்டவணைகள் இனி வரும் ஆய்வாளர்களுக்கான ஆய்வுக்களம் உணர்த்தும் பகுதியாகும்.

ஏறக்குறைய 834 வரலாற்றுப் பதிவுகள் உள்ளன என இனம்காணும் ஆய்வாளர் மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள், புலவர்கள், மக்கள் என அனைவருக்கும் உள்ள உறவு நிலை பற்றி விரித்தும், அவற்றில் குறுநில மன்னர்களுக்கும்,புலவர்களுக்கும் இடையே ஓர் இணக்கமான உறவு நிலை இருப்பது தெளிவாகிறது என்ற தன் ஆய்வு முடிவையும் தருகிறார். வரலாற்றுப் பதிவுகளின் அடிப்படையில் மன்னர்களைப் பற்றிய தரவரிசை, மூவேந்தர்களைப் போல் குறுநில மன்னர்கள் பெற்றிருந்த மதிப்பு, மன்னர்களுக்கிடையே காணப்பட்ட பகைமை உணர்வு என எட்டுத்தொகை வழி அறியலாகும் வரலாற்றுப் பதிவுகள் அனைத்தையும் 231 பக்கங்களில் விரித்துரைத்துள்ளார்.

**சங்க இலக்கியத்தில் கதைகள்**

பொ.முத்துமாரியின் ‘சங்க இலக்கியத்தில் கதைகள்’ எனும் ஆய்வேடு ‘கதை விளக்கம், சங்க இலக்கியத்தில் கதைகள், சங்கப் புலவர்களின் கதைத்திறன் என்ற இயல் பகுப்புகளில் பகுதிநேர ஆய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்களில் காணப்படும் கதைகளை யும், அது கூறும் அன்றைய சமூகத்தையும், அன்று பயன்பாட்டில் இருந்த கதைகளைத் தக்கவாறு பயன்படுத்திக் கொண்ட புலவர்களின் திறன் குறித்தும், அக்காலத்து வழங்கிய மன்னர், கடவுளர் பற்றிய கதைகளையும் விரத்துரைத்துள்ளார். சங்க காலக் கதைகளின் நம்பகத்தன்மை குறித்தும், அக்கதைகள் வழி உணர்த்தப் படும் உண்மைகள் குறித்தும் விளக்கி யுள்ளார். சங்க காலச் சமூகத்தில் வழங்கிவந்த கதைகளை விளக்கி யுரைப்பதை நோக்கமாகக் கொண்ட ஆய்வாளர் அக்கதைகள் அனைத்தையும் பதிவு செய்துள்ளதோடு, கதைகளைத் தக்க முறையில் பயன்படுத்திக் கொண்ட புலவர்களின் படைப்புத்திறனே சிறப்புக் குரியது என்பதனையும் தனது ஆய்வு முடிவாகத் தந்துள்ளார். பழங்கதைகளும், பழமொழிகளும், கதைக்களம் போன்ற துணை நூல்களுடன் 241 பக்கங்களில் தரவுகளை அட்டவணையாகப் பின்னிணைப்பிலும் தந்துள்ளார்.

**சங்க இலக்கியங்களில் தோழிக்கான உவமைப் பயன்பாட்டு வரையை**

‘தோழிக்காயின் நிலம்பெயர்ந் துரையாது’ என்று தொல்காப்பியம் கூறும் தோழிக்கான உவமைப் பயன்பாட்டு வரையறை நூற்பாவை முன்னிறுத்தி சங்க இலக்கியங்களை ஆராய்ந்துள்ளார் ப. நிவேதிதா. தொல்காப்பிய இலக்கணமே சங்கஇலக்கியங்களில் பொருந்தி வருவதாகக் கருதுகோளை அமைத்துக் கொண்ட ஆய்வாளர் அதற்கானச் சான்றுகளை ஆறு இயல்களில் விரித்துரைத்துள்ளார். திணை வாரியாகக் காணப்படும் பாடல்களின் எண்ணிக்கை, அவற்றுள் தோழி கூற்று உவமைப்பாடல்கள் என இனங்கண்டு தொல்காப்பிய நூற்பாவைப் பொருத்திக் கண்டுள்ள ஆய்வாளர் அதை அட்டவணைப்படுத்திப் பின்வரும் ஆய்வாளர்களுக்கு உதவும் வண்ணம் தந்துள்ளார். நூற்பாவுக்கு இயையக் காணப்படும் பாடல்கள் மட்டுமன்றி முரண்பட்டு வரும் பாடல்களையும் இயல்தோறும் எடுத்துக்காட்டியுள்ளார்.

**நற்றிணையில் மொழிதல்**

சங்க இலக்கியங்களுள் ஒன்றான நற்றிணையில் அமைந்துள்ள மனன் அழிந்து மொழியும் கூற்றுகளைத் தொகுத்து அவற்றுள் பதிவு செய்யப்பட்டுள்ள ஆய்விற் குரிய கலங்கி மொழிதல் எனும் அக உணர்வினை எடுத்துரைப்பதும், அது கூற்றாளர்க்குத் தக்க எங்ஙனம் வேறுபட்டு அமைந்துள்ளன என்பதனையும், அவர்கள் உள்ளத்தில் அக்கலக்கம் ஏற்படுவதற்கு உகந்த காரணிகளாகவும், சூழல்களாகவும் அமைவன எவை? என்பதையும் ஆராய்ந்து வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஆய்வாளர் கா.சத்தியமூர்த்தி, எக்காலத்தும் எம்மக்களும் ஏற்றுப் போற்றத்தக்க வகையில் அமைந்திருக்கும் அக உணர்வுப் பாக்களைத் தன்னகத்தே கொண்டது சங்க இலக்கியங்கள் என்பதும், இவ்வுணர்வு களையும் உளவியல்அடிப்படையில் ஆய்ந்து உணர்ந்து அதனைத் தங்கள் பாக்களின் வழி தந்துள்ளனர் புலவர் பெருமக்கள் என்பதனையும், இதன்வழி சங்க மக்களின் வாழ்வியலை இன்றும் அறியும் வண்ணம் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன என்பதனையும் கருதுகோளாகக் கொண்டு அதனைத் தன் ஆய்வின் வழி சான்றுகாட்டி நிறுவியுள்ளார். நற்றிணையில் உள்ள 400 பாடல்களில் கூற்றுவாரியாக கலங்கி மொழியும் பாடல்களை இனம்கண்டு அதனை ஐந்து இயல்களில் விரித்துரைத் துள்ளார். திணை அடிப்படையில் காணப் படும் கலங்கி மொழியும் பாடல்களை அட்டவணைப்படுத்தியும் தந்துள்ளார்.

**சங்க இலக்கியங்களில் தலைவிக்கான உவமைப் பயன்பாட்டு வரையலை**

'கிழவி சொல்லின் அவளறி கிளவி' என்ற தலைவிக்கான உவமைப் பயன்பாட்டு வரையறை குறித்தத் தொல்காப்பிய நூற்பாவை மையமாகக் கொண்டு உவமை கூறுதலில் தலைவிக்குரிய வரையறை என்ன? அவள் உவமை கூறுகையில் எந்த அளவில் முதல், கருப் பொருள்களைப் பயன்படுத்தலாம். அவ்விலக்கண முறைப் படி சங்க இலக்கியத் தலைவி கூற்றுப் பாடல்கள் அமைந்துள்ளனவா? தொல்காப்பியத்தைப் பின்பற்றித்தான் சங்க இலக்கியங்கள் அமைந்துள்ளனவா? என்ற பல்வேறு வினாக்களுக்கு விடைதேடுதலை நோக்கமாகக்கொண்டு 'சங்கஇலக்கியங்களில் தலைவிக்கான உவமைப் பயன்பாட்டு வரையறை' என்ற தலைப்பில் ஆய்வு மேற் கொண்ட ஆய்வாளர் ப.கோகுலவர்த்தினி இலக்கண விதிப்படிதான் சங்க இலக்கியங்கள் அமைந்துள்ளன என்ற கருது கோளையும் நிறுவியுள்ளார். மேலும் தொல் காப்பியம் கூறும் தலைவி பற்றிய கோட் பாடுகளை ஒரு இயலில் விரித்துக்கண்டுள்ள ஆய்வாளர் திணைவாரியாக, தலைவி கூற்று உவமைகளைச் சங்க இலக்கியங்கள் முழுமையும் கண்டு விரித்துரைத்துள்ளார். தொல்காப்பியத்தைப் பின்தொடர்ந்த சிந்தனையைக் கண்டாலும், சில பாடல்களில் காணப்படும் மயக்கங்கள் தொல்காப்பியம் அல்லது அதைப் போன்ற ஏதேனும் ஒரு இலக்கணத்தைப் பின்பற்றி சங்கஇலக்கியங்கள் எழுந்திருக்கலாம் என்ற நிலையில் ஆய்வு செய்யலாம் என்ற மேலாய்வுக்கு அடிகோலுகிறார்.

**அகநானூற்றில் உயிரியல்**

க.இராஜேந்திரனின் 'அகநானூற்றில் உயிரியல்' என்னும் ஆய்வேடு அகநானூற்றில் பதிவாகியுள்ள உயிரினங்கள் வகைப்படுத்துதலும், அவ்வுயிரினங்கள் குறித்த இன்றைய அறிவியலாளர்களின் கருத்துக்களையும், சங்ககாலத்துக் காணப்பட்ட உயிரினங்களை நுட்பமாக அறிந்து, அவற்றை மனித வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து கருப்பொருளாக இன்றைய அறிவியலாளர்களின் முன்னோடியாகப் பதிவுசெய்துள்ள புலவர்களின் பன்முகத் திறனை எடுத்துரைப்பதையும் நோக்கமாகக் கொண்ட ஆய்வாளர் இன்றைய அறிவியல் ஆய்வுகளைவிட இயற்கையோடு இயைந்து வாழ்ந்த சங்க மக்களின் அறிவியல் புலமை போற்றத்தக்கது என்ற கருதுகோளை ஆய்வின் வழி நிறுவியுள்ளார்.

உயிரியல் விளக்கம் மற்றும் திணை வாரியான உயிரியல் செய்திகளை தனது இயல்களின்வழி விரித்துரைத்துள்ளார். முன்னோர்களின் அறிவுநுட்பத்தை அறிய பிற இலக்கியங்களிலும் உயிரின ஆய்வை மேற்கொள்ள வேண்டும் என்ற மேலாய்வு களத்தையும் கூறியுள்ள ஆய்வாளரின் உயிரினங்கள் குறித்த அட்டவணை, அதன் நிழற்படங்கள் ஆய்வாளர்களுக்கு உதவுவன.

**காப்பியங்களில் அ மாந்தர்கள்**

'மாந்தர் படைப்பு என்பது காப்பியத்தின் உயிர் நாடியாகும். அதன் வழியேதான் தான் சமூகத்திற்குக் கூற விழைந்த அறத்தைப் படைப்பாசிரியர் வலியுறுத்துகின்றார்.' அத்தகைய காப்பிய மாந்தர் படைப்புகள் குறித்தும், அதன் வழி உணர்த்தப்படும் அறம் மற்றும் காப்பிய ஆசிரியரின் படைப்புத்திறன் குறித்தும் எடுத்துரைப்பதை நோக்கமாகக் கொண்டு 'காப்பியங்களில் அறமாந்தர்கள் என்ற தலைப்பில் பா.தென்றல் தன் ஆய்வை நிறைவு செய்துள்ளார். ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறுகாப்பியங்களை ஆய்வு எல்லையாகக் கொண்ட ஆய்வாளர் காப்பியங்கள் தொடர்பான முப்பெருங் காப்பியங்களில் அறக் கோட்பாடுகள், நிலக்கோட்பாடுகள், சமயக் கோட்பாடுகள் போன்ற முன்னாய்வுகளின் துணையுடன், சமயம் சார்ந்த அறங்களை எடுத்துரைக்கவே காப்பியங்கள் தோன்றின என்பதனைக் கருதுகோளாகக் கொண்டு சான்றுகளுடன் நிறுவியும் உள்ளார். காப்பியங்களில் அறம், ஐம்பெரும், சிறும் காப்பியங்களில் அறம், அதனை எடுத்துரைக்கும் மாந்தர்கள், ஆசிரியரின் புலமைத்திறன் போன்றமை விளக்கவியல் மற்றும் சமூகவியல் அணுகுமுறைகளின் வழி ஆராய்ந்துள்ளார். காப்பியங்கள் தொடர்பான 80-க்கும் மேற்பட்ட துணை நூற்களின் பட்டியலும், மாந்தர்களைக் காப்பிய அடிப்படையில் அறிமுகம் செய்துள்ள பின்னிணைப்பும் பின்வரும் ஆய்வாளர்களுக்குப் பெரிதும் உதவுபவையாகும்.

**இக்கால இலக்கிய ஆய்வு**

'சமூக நோக்கில் கீரனூர் ஜாகிர்ராஜாவின் படைப்புகள் - ஒரு மதிப்பீடு' என்னும் தலைப்பில் இ.முகமது உசேன் செய்துள்ள ஆய்வு படைப்பாளரின் சமூக நோக்கை

விரித்துரைக்கிறது. சிறுகதை, புதினம், கட்டுரை என்ற பல தளங்களிலும் தடம் பதித்து வரும் ஜாகிர் ராஜா இசுலாமியர் என்பதால் அவர் சமூகம் குறித்த விரிந்த பார்வையுடன், விழிப்புணர்வைத் தூண்டும் வகையில் தம் படைப்புகளை அளித்துள்ளார். அவற்றை மதிப்பீடு செய்து விளக்கியுள்ள ஆய்வாளர், அதற்கானச் சான்றுகளையும் எடுத்துக்காட்டி தனக்கெனத் தனிமைப் பெறும் வகையில் சமூக நோக்கோடு ராஜாவின் படைப்புகள் உள்ளன என்ற கருதுகோளையும் நிறுவியுள்ளார். ஐந்து புதினங்கள், மூன்று சிறுகதைத் தொகுப்புகள், நான்கு தொகுப்பு நூல்கள் முதன்மை ஆதாரமாகக் கொண்டு நான்கு இயல்களில் தமது ஆய்வை விரித்துரைத்துள்ளார். துணைநூற்பட்டியலுடன் படைப்பாளருடனான நேர்காணல், அவரின் விவரக் குறிப்பு, இசுலாமிய வழக்குச் சொற்கள் அட்டவணை போன்ற பின்னிணைப்பு தொடர்ந்து ஆய்வுகளுக்குப் பயன்படக்கூடியவை.

**காலந்தோறும் தமிழர் இசை**

இசை மற்றும் இசைக் கருவிகள் பற்றிய ஆய்வு சங்க காலம் முதல் இக்காலம் வரையிலான இசையின் வளர்ச்சியை இலக்கியச் சான்றுகள் வழி எடுத்துரைப்பதும், அதற்கு பயன்படுத்தப்பட்ட கருவிகள் குறித்தும் பதிவு செய்வன நோக்கமாகக் கொண்டு 'காலந்தோறும் தமிழர் இசை' என்ற தலைப்பில் மா.மணிகண்டனால் எழுதப் பெற்ற இவ்வாய்வேடு இசை வளர்ச்சியை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன என்பதையும், படைப்பாளர்கள் இசையறிவே இதற்கான காரணம் என்றும், இசை மக்களின் வரவேற்புக்கு உரியதாக இருந்தமையால்தான் இலக்கியங்கள் வழி கொண்டு சேர்க்கப்பட்டன என்பதையும் கருதுகோளாகக் கொண்டு அதனைச் சான்றுகளின் வழி நிறுவியும் உள்ளார்.

முற்காலம், இடைக்காலம், தற்காலம் என்ற இயல் பகுப்பில் சங்ககாலம் முதல் இசை பற்றியும், அதற்கு பயன்பட்ட இசைக் கருவிகள் குறித்தும், அதைப் பதிவு செய்துள்ள இலக்கியங்கள் மற்றும் இறையறிவு மிக்க படைப்பாளர்கள் குறித்தும் விரித்து ஆராய்ந்துள்ளார். குறிப்பாக இசை மற்றும் இசைக் கருவிகள் குறித்த நிழற்படங்கள் அட்டவணைகளும், தற்போதும் காணப்படும் அல்லது மறைந்து போன இசைக் குறிப்புகள் குறித்தும், மாறிய இசை மற்றும் இசைகுறித்தக் கலைச்சொற்கள் மற்றும் இசைக் கருவிகள் அமைப்பு குறித்தும் விரித்திருப்பது ஆய்வுலகிற்குத் தேவையான தரவுகள் ஆகும்.

இவ்வாறு இதுகாறும் நிறைவு செய்யப்பட்ட பத்து முனைவர் பட்ட ஆய்வுகளில் சங்க இலக்கியம், காப்பிய இலக்கியம், இக்கால இலக்கியங்கள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவும் செய்யப்பட்டுள்ளன. 'மாற்றி யோசித்தல்' என்பதும், அவ்வாறு கருத்தில் கொள்ளப்பட்ட முடிவின் நோக்கித் தக்க அணுகுமுறைகளைக் கையாண்டு, முன்னாய்வுகள், துணைநூற்கள், ஆய்வேடுகள், கலைக்களஞ்சியங்களின் உதவியுடன் தன் கருதுகோளை நிறுவியிருப்பதுடன் மேலாய்வுக் களங்களையும் அடையாளம் காட்டிச் சென்ற இவ்வாய்வேடுகள் இனிவரும் ஆய்வாளர்களுக்கு வழிகாட்டியாய் அமையும்.

**துணை நின்ன**

*1. மாரிமுத்து.இரா, 'ஐங்குறுநூற்றில் உயிரியல் செய்திகள்', நெறியாளர் : முனைவர் மு.சுதா, இணைநெறியாளர்: முனைவர் மு.பாண்டி, தமிழ்த்துறை,அழகப்பா பல்கலைக்கழகம், மே,2010*

*2. இராஜேந்திரன்.ந, 'சங்க இலக்கியத்தில் வரலாற்றுப்பதிவுகள்', நெறியாளர் : முனைவர் மு.சுதா, தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், ஜூன்,2013*

*3. மணிகண்டன்.மா, 'காலந்தோறும் தமிழர் இசை', நெறியாளர் : முனைவர் மு.சுதா, இணைநெறியாளர்: முனைவர் மு.பாண்டி, தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், மார்ச்,2013*

*4. தென்றல்.பா, 'காப்பியங்களில் அறமாந்தர்கள்', நெறியாளர் : முனைவர் மு.சுதா, இணைநெறியாளர்: முனைவர் மு.பாண்டி, தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், ஜூலை,2013*

*5. முத்துமாரி.பொ, 'சங்க இலக்கியத்தில் கதைகள், நெறியாளர் : முனைவர் மு.சுதா, இணைநெறியாளர்: முனைவர் மு.பாண்டி, தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், நவம்பர்,2013*

*6. நிவேதிதா.ப, 'சங்க இலக்கியங்களில் தோழிக்கான உவமைப் பயன்பாட்டு வரையறை', நெறியாளர் : முனைவர் மு.சுதா, தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், ஜூலை,2015*

*7. சத்தியமூர்த்தி.கா, 'நற்றிணையில் மொழிதல்', நெறியாளர் : முனைவர் மு.சுதா, தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், ஆகஸ்டு,2015.*

*8. முகமது உசேன்.இ, 'சமூகநோக்கில் கீரனூர் ஜாகிர் ராஜாவின் படைப்புகள் ஒரு மதிப்பீடு, நெறியாளர் : முனைவர் மு.சுதா, தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், ஜூலை,2018*

*9. கோகுலவர்த்தினி.ப, 'சங்க இலக்கியங்களில் தலைவிக்கான உவமைப் பயன்பாட்டு வரையறை'இ நெறியாளர் : முனைவர் மு.சுதா, தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், ஜூலை,2018*

*10. இராஜேந்திரன்.க, 'அகநானூற்றில் உயிரியல்' நெறியாளர் : முனைவர் மு.சுதா, தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், ஜூலை,2018*